# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி　　　பகுதி - அ　　　மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.　　14 x 1 = 14

1. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் எனக் கூறியவர் யார்?
அ) லெனின்　ஆ) மார்க்ஸ்　இ) சன்யாட் சென்　ஈ) மாசேதுங்

2. யாருடைய பணியும் இயக்கமும், 1856 ஆம் ஆண்டு விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிகோலியது?
அ) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்　ஆ) இராஜாராம் மோகன்ராய்
இ) அன்னிபெசன்ட்　ஈ) ஜோதிபா புலே

3. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?
அ) தாதாபாய் நௌரோஜி　ஆ) நீதிபதி கோவிந்த் ரானடே
இ) பிபின் சந்திர பால்　ஈ) ரொமேஷ் சந்திரா

4. கூற்று : காங்கிரஸ் முதலாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது
காரணம் : காங்கிரஸ் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள காந்தி-இர்வின் ஒப்பந்தம் வழிவகை செய்தது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை
ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது
இ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்

5. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது?
அ) ஈரோடு　ஆ) சென்னை　இ) சேலம்　ஈ) மதுரை

6. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ______.
அ) ஊட்டி　ஆ) கொடைக்கானல்　இ) ஆனைமுடி　ஈ) ஜின்டா கடா

7. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட இடம்
அ) குஜராத்　ஆ) இராஜஸ்தான்　இ) மகாராஷ்டிரம்　ஈ) தமிழ்நாடு

8. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
அ) இராமநாதபுரம்　ஆ) நாகப்பட்டினம்　இ) கடலூர்　ஈ) தேனி

9. தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர் மின்சக்தி திட்டம் ______.
அ) மேட்டூர்　ஆ) பாபநாசம்　இ) சாத்தனூர்　ஈ) துங்கபத்ரா

10. கரும்பு உற்பத்தியில் இந்தியாவில் முதலிடம் வகிக்கும் மாநிலம்
அ) உத்திரபிரதேசம்　ஆ) குஜராத்　இ) மேற்கு வங்கம்　ஈ) கேரளா

11. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?
அ) ஆந்திரப்பிரதேசம்　ஆ) தெலுங்கானா　இ) தமிழ்நாடு　ஈ) உத்திரப்பிரதேசம்

12. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?
அ) இந்தியா மற்றும் நேபாளம்　ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
இ) இந்தியா மற்றும் சீனா　ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

13. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480 ஐ கொண்டு வந்த நாடு ______.
அ) அமெரிக்கா　ஆ) இந்தியா　இ) சிங்கப்பூர்　ஈ) இங்கிலாந்து

14. இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதன்முதலில் ______ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1860　ஆ) 1870　இ) 1880　ஈ) 1850

பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா)　　10 x 2 = 20

15. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எப்போது பெற்றார்?

16. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவாதிக்கவும்.

17. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகள் யாவை?

www.Padasalai.Net
CamScanner

18. சமூக சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் கோவிந்த ரானடே பங்களிப்பைக் குறிப்பிடுக.
19. பிரிட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
20. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
21. அதிக மழை பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
22. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?
23. தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.
24. தேசிய அவசர நிலை என்றால் என்ன?
25. சார்க் உறுப்பு நாடுகளை பட்டியலிடுக.
26. FAO வின் படி உணவு பாதுகாப்பு வரையறு.
27. வரி ஏய்ப்பு என்றால் என்ன?
28. பெரியார் தொடங்கிய செய்தித்தாள்கள் யாவை?

## பகுதி - இ

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா)** **10 x 5 = 50**

29. ***கோடிட்ட இடங்களை நிரப்புக.***
    1. ______ தமிழ் மொழியியல் தூய்மை வாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்.
    2. குலம்கிரி நூலை எழுதியவர் ______.
    3. நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி ______ ஆகும்.
    4. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ______.
    5. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ______ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.
31. வேலூரில் 1806-ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
32. அ) ***வேறுபடுத்துக :***
    i) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
    ii) வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
    ஆ) ***காரணம் கூறுக :*** வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்
33. பெண்களின் மேம்பாட்டிற்கு 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
34. இமயமலையின் உட்பிரிவும் அதன் முக்கியத்துவம் பற்றி விவரி.
35. இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களைப் பற்றி கூறுக.
36. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதுக.
37. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறை உறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவாக குறிப்பு எழுதுக.
39. பசுமைப்புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி.
40. GST யின் அமைப்பு பற்றி எழுதுக.
41. ***காலக் கோடு வரைக :*** 1935 - 1950 ஏதேனும் 5 நிகழ்வுகள்
42. கீழ்க்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
    1) மொராக்கோ 2) சான்பிரான்சிஸ்கோ 3) ஜப்பான் 4) இத்தாலி 5) ரஷ்யா

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2 x 8 = 16**

43. அ) நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூகநீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும். ***(அல்லது)***
    ஆ) இந்திய தேசிய காங்கிரஸின் தொடக்க கால கோரிக்கைகளை பற்றி விவரி.
44. அ) ***கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.***
    1) கிழக்கு தொடர்ச்சி மலைகள் 2) மலை மண் 3) அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்
    4) மின்னியல் தலைநகரம் 5) ஏதேனும் ஒரு பல்நோக்கு திட்டம்
    6) பன்னா உயிர்கோள பெட்டகம் 7) வேம்பநாடு ஏரி 8) சுந்தரவனம் ***(அல்லது)***
    ஆ) ***கீழ்க்கண்ட இடங்களை தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.***
    1) ரப்பர் விளையும் பகுதி 2) மேட்டூர் அணை 3) ஏலகிரி குன்று 4) வேலூர்
    5) தாமிரபரணி 6) தூத்துக்குடி 7) பறவைகள் சரணாலயம் ஏதேனும் ஒன்று
    8) பிச்சாவரம்

*******

www.Padasalai.Net
CamScanner